களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Kalanjiyam - International Journal of Tamil Studies (KIRJTS)
*An Internationally Peer-Reviewed, Open Access Quarterly Journal*
*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# Ekara phrases of Sangam women poets

**Dr. R. Hemalatha**
Assistant Professor, Department of Tamil, B. S. Abdur Rahman Crescent Institute of Science and Technology, Vandalur, Chennai – 600 048
**Email:** hemakums2013@gmail.com

**Abstract:**

The subject and predicate form the basic parts of a sentence, serving as the foundation for various sentence types. Syntax, as Pa. Veerappan notes in Sanga Ilakkiya Nadai, studies the arrangement of language elements and their interrelations.

Syntax can be analyzed in two ways: by the length of sequences (thodar) and by their structure. Poets use short or long sequences, sound patterns, and word choices to shape their style, making alliterative, assonantal, or contrasting sequences, as well as noun, verb, finite, or participial phrases. Sometimes grammar is stretched for poetic effect, and repetition of sequences may occur.

In Sangam poetry, sequences involving subject, predicate, participles, and other syntactic elements bend and adapt to create unique expression. This paper examines such syntactic patterns in the works of Sangam women poets.

In sentence construction, noun phrases and verb phrases occupy a fundamental and essential place. Noun phrases include adjective, appositional, exclamatory, and substitute forms, while verb phrases include adverbial, participial, finite, and case-marked forms. Among these, the ēkāra phrases found in the poems of Sangam women poets are the focus of this study.

**Keywords** : *Sangam Women poets, Ekara words, Wtiting style, Syntax, Language elements, Pattern*

**References:**

1. Agathiyalingam, S. *Tamilmozhi Amaippiyal* [Tamil Language Structuring]. Meyyappan Pathippagam, Chidambaram, 2011.
2. Ammankilmurugadhas. *Sangak Kavithaiyakkam: Marabum Maatramum* [Sangam Poetry Creation: Tradition and Change]. Kumaran Puthaga Illam, Chennai, 2006.
3. Subburreddiyar, N. *Kavithaiyanubavam* [Poetry Experience]. Kazhaga Veliyedu, Chennai, 1961.
4. Renuka Devi, V. *Sanga Penpaal Pulavargalin Mozhinadai* [Language Style of Sangam Female Poets]. Ulaga Tamil Aaraichi Niruvanam, Chennai, 2012.
5. Veerappan, Pa. *Sanga Ilakkiya Nadai* [Sangam Literature Style]. Poovazhagi Pathippagam, Chennai, 2010.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# சங்கப் பெண்புலவர்கள் பாடல்களில் ஏகாரத் தொடர்

**முனைவர் இர. ஹேமலதா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பி. எஸ். அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், வண்டலூர், சென்னை – 600 048

**ஆய்வுச் சுருக்கம்:**

வாக்கியத்தின் அடிப்படை உறுப்புகளாக எழுவாய், பயனிலை ஆகியன அமைகின்றன. இவை இரண்டுமே வாக்கியத்தின் அடிப்படைகளாக அமைந்து பல்வகை வாக்கியங்களுக்கு அடிகோலுகின்றன. "மொழியின் பல பகுப்புகளின் (ரnவைள) முறை வைப்பும் அவற்றிடையே உள்ள தொடர்பும் பற்றிப் பேசுவது தொடரியல் (ளலவெயஒ)" என்று பா. வீரப்பன் அவர்கள் தனது சங்க இலக்கிய நடை என்ற நூலில் குறிப்பிடுவார்.

தொடரினை இரண்டு நிலைகளில் ஆய்வு செய்யலாம். ஒன்று தொடரின் நீளம், இரண்டு தொடரின் அமைப்பு. இதனை அடிப்படையாகக் கொண்டே புலவர்கள் தொடர்களைக் கையாளுகின்றனர். அவர்கள் ஆளும் சிறு அல்லது நீண்ட தொடர்களை வைத்தும் தொடர்களை ஆக்கும் அமைப்பை வைத்தும் அவர்களது நடையினை வேறுபடுத்தவும் ஒப்புமைப்படுத்தவும் இயலும். அவர்களது எண்ணவோட்டங்களுக்கு ஏற்றவாறு ஒலிக்கூறுகளையும் சொல் தேர்வுகளையும் கொண்டு தொடரமைப்பு உத்திகளை இனங்காண்பது நடையியல் ஆய்விற்கு அவசியமாகிறது.

ஒலிக்கூறுகளைக் கொண்டு எதுகைத் தொடர், மோனைத் தொடர், முரண் தொடர் என தொடர்கள் பல உருவாக்கம் பெறுவதும் சொற்களின் தேர்வினைக் கொண்டு பெயர்த்தொடர், வினைத்தொடர், முற்றுத்தொடர், எச்சத்தொடர், அடைத்தொடர், விளித்தொடர் என தொடர்கள் பல அடையாளப் படுத்தப்படுவதும் இயல்பாகும். ஒருதொடரின் இயல்பான பண்புகளை வைத்தும் தொடர்கள் வகைமைகளுக்கு உள்ளாகிறது. சான்று நேர்க்கூற்று– அயற்கூற்று போன்ற வாக்கியங்கள் மற்றும் செய்வினை–செயப்பாட்டு வினை போன்றவை. 'மாட்டு' போன்ற செய்யுள் உறுப்புகளால் இலக்கண மரபை மீறியும் உணர்ச்சி நிலையில் சில மாறுதல்களுக்கு உட்பட்டும் சில தொடர்கள் அமைவதுண்டு. ஒரே தொடர் திரும்பத் திரும்ப ஒரே பாட்டில் அமைவதும் உண்டு. தொடரமைப்பும் அவை இணைக்கப்படும் முறையும் நடையியலில் ஒரு முதன்மையான உத்திகளாகும்.

சங்க இலக்கியத் தொடர்கள், அடைகள், எழுவாய், பயனிலை, வினையெச்சம் உள்ளிட்ட பல தொடரியல் கூறுகளைக் கொண்டு பாடலுக்கென வளைந்தும், பிறழ்ந்தும், புதியதாயும் ஆக்கம் பெற்றுள்ளன. இத்தகைய தொடர் நிலைகளுள் ஏகாரத் தொடர்கள் சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் அமையும் பான்மையை இக்கட்டுரை ஆராய்வதாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** சங்கப் பெண் கவிஞர்கள், ஏகாரச் சொற்கள், எழுத்து நடை, தொடரியல், மொழி கூறுகள், அமைப்பு

**தொடர் வகைமைகள்**

- தொல்காப்பியம் வாக்கியத்தில் முதன்மைக் கூறுகள் வரிசை முறை மாறி அமைவதை 'மொழிபுணர் இயல்பு' (எச்சவியல், 8) எனக் கூறி வகைப்படுத்துகிறது.
- கருத்துவகை – அமைப்புவகை என பரந்தாமனார் வாக்கியத்தை இரு நிலைகளில் பிரித்துள்ளார்.
    - கருத்துவகை – செய்திவாக்கியம், உணர்ச்சிவாக்கியம், வினாவாக்கியம் முதலியவை
    - அமைப்புவகை – தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலவைவாக்கியம்
- தனிவாக்கியம் - இதனுள் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற மூன்று கூறுகள் இடம்பெற்றிருக்கும்.
    - கூட்டுவாக்கியம் - இரு தனிவாக்கியங்கள் இணைந்து கூட்டுவாக்கியம் அமைகிறது. இதற்குதொடர் இணைப்பான்கள் பயன்படுகிறது.
    - கலவைவாக்கியம் – ஒன்றுக்கு மேற்பட்ட தனி வாக்கியங்கள் இணையும் போது சிறு மாற்றங்களுக்குட்பட்டு கலவை வாக்கியம் உண்டாகிறது.

வாக்கிய உருவாக்கத்திற்கு பெயர் மற்றும் வினைத்தொடர்கள் மிக அடிப்படையான, அவசியமான இடத்தைப் பெற்று விளங்குவனவாகும். பெயர்த் தொடர்களில் பெயரடை, பெயரெச்சங்கள், விளி, பதிலிடு போன்ற தொடர்களும் வினைத் தொடர்களில் வினையடை, வினையெச்சம், வினைமுற்று, வேற்றுமை போன்ற தொடர்களும் இடம்பெறுகின்றன. அவற்றுள் சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் ஏகாரத் தொடர்கள் ஆராயப் பெறுகின்றன.

**ஏகாரத் தொடர்**

சங்கச் செய்யுளில் ஏகாரம் தனிப்பெரும் சிறப்பு பெற்று திகழ்பவையாகும். இவ்வேகாரமானது 5 நிலைகளில் இடம்பெறும் என தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

"தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே" **(தொல். சொல். 257)**

சங்க இலக்கியங்களில் தேற்றம் (தெளிவு), வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என்ற 5 இடங்களில் மட்டுமே ஏகாரச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இவ்வேகாரச் சொற்கள் அசை நிலையில் வருவதாயினும் சங்கப் பாடல் தொடர்களுள் தனிச் சிறப்புப் பெற்று திகழ்கின்றன. ஏகாரத் தொடர்கள் சங்கப் பெண்பாற்புலவர்கள் பாடல்களிலும் தனியிடம் பெற்றுள்ளன. பிறபெண்பாற் புலவர்களை விட வெண்பூதியார், வெள்ளிவீதியார் ஆகியோர் ஏகாரத் தொடர்களை மிகுதியாகக் கையாண்டுள்ளனர்.

**(எ.கா)**

"யானே ஈண்டை யேனே என்நலனே
ஆனா நோயொடு கான லஃதே
துறைவன் தம் ஊரானே,

மறை அலர் ஆகிமன்றத் தஃதே" **(குறுந். 97)**

"பொருள்வயிற் பிரிவார் ஆயின் இவ் உலகத்துப்

பொருளே மன்ற பொருளே

அருளே மன்ற ஆடும்இல் லதுவே" **(குறு. 174)**

"பயப்பு மேனியதுவே நயப்பு அவர்

நார்இல் நெஞ்சத்து ஆர்இடை யதுவே

செறிவு சேண்இகந் தன்றே அறிவே

ஆங்கண் செல்கம் எழுகஎன, ஈகே

. . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . .

இடம்மன் தோழி எந்நீரிரோ? என்னே" **(குறு. 219)**

**வெண்பூதியார் பாடல்களில் ஏகாரத் தொடர்கள்**

பிற பெண்பாற்புலவர்கள் ஏகாரத் தொடர்களைக் கையாண்டிருப்பினும் வெண்பூதியார் பாடல்களில் இவ்வேகாரத் தொடர்கள் மிகுந்துள்ளதை மேற்சுட்டிய பாடல்களின் மூலம் அறியலாம். தேற்றம், அழுத்தம் ஆகியவற்றிற்காக இத்தகைய ஏகாரங்களைக் கையாளுதல் என்பதும் ஓர் இலக்கிய உத்தியாகும். இப்பெண்பாற் புலவர் ஏகாரத்தை எண்ணல், தேற்றல் ஆகிய இரு நிலைகளில் கையாண்டுள்ளார். குறிப்பாக, இவரது குறுந்தொகை பாடல்கள் மூன்றுமே பிரிவு குறித்த தலைவி கூற்றாகவே அமைந்துள்ளன. ஒரு பாடல் பாலை திணையினையும் (குறு. 174) மற்ற இரண்டும் நெய்தல் திணையினையும் சார்ந்தவை. தலைவி தனது ஆற்றாமையைச் சுருங்கக் கூற இத்தகைய ஏகாரத்தைக் கொண்ட குறுகிய தொடர்களால் உணர்த்தி நிற்கிறாள். பாடலின் அழகுணர்ச்சிக்காகவும், கருத்தாழத்திற்காகவும் இவ்வேகாரத் தொடர்களை பயன்படுத்தியுள்ளார்.

**வெள்ளிவீதியார் பாடல்களில் ஏகாரத் தொடர்கள்**

இவரைப் போன்றே வெள்ளிவீதியாரும் இத்தகைய ஏகாரத் தொடர்களைத் தமது குறுந்தொகைப் பாடல் ஒன்றினுள் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

**(எ.கா.)**

"காலே பரிதப் பினவே கண்ணே

நோக்கி நோக்கி வாள்இழந் தனவே

அகல் இரு விசும்பின் மீனினும்

பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே" **(குறு. 44)**

மேற்சுட்டிய பாடலும் பாலைத் திணையைச் சார்ந்த பிரிவுத்துயரைக் கூறும் தலைவி கூற்றுப் பாடலாக அமைந்துள்ளமை நோக்குதற்குரியது. பெரும்பாலும் இத்தகைய ஏகாரத் தொடர்கள் குறுகிய தொடர்களால் ஆக்கப்பட்டுள்ளன. ஏகாரங்களை அமைத்துப் பாடுவதும் ஓர் இலக்கிய உத்தியாகவே கொள்ளப்படுகிறது. புறப்பாடலை விடவும் அகப்பாடல்களிலேயே இவை அதிகம் காணப்படுகின்றன.

**ஔவையாரின் ஏகாரப் பயன்பாடு**

புறப்பாடலை நோக்கும் போது ஔவையார் தமது புறநானூற்றுப் பாடல் (புறம். 235) ஒன்றனுள் அதிகமான ஏகாரத் தொடர்களைக் கையாண்டுள்ளமையைக் காணமுடிகிறது. 20 அடி கொண்ட இப்பாடலுள் 11 ஏகாரங்களைக் கையாண்டுள்ளார்.

**(எ.கா.)**

"சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே !
பெரியகட் பெறினே
யாம் பாடத்தான் மகிழ்ந்துண்ணும் மன்னே!
சிறுசோற் றானும் நனிபல கலந்தன் மன்னே!
பெருஞ் சோற்றானு நனிபல கலத்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லா எமக்கீயு மன்னே!
அம்பொடு வேனுழை வழியெல்லாம் தானிற்கு மன்னே!
நரந்த நாறுந் தன்கை யாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே" **(புறம். 235)**

என ஏகாரத் தொடர்கள் தொடர்ந்து வருதலை இங்கு காணமுடிகிறது. மன்னே! மன்னே ! என்ற ஏகாரங்கள் கழிவுப் பொருளைத் தாங்கி நின்று பாடல் கருத்திற்கு ஒரு தேற்றத்தினையும் கருத்தாழத்தினையும் தந்து அமைந்துள்ளன. கையறுநிலையில் ஔவை தமது மனவுணர்வினை இவ்வேகாரத் தொடர்கள் மூலம் பதிவுசெய்துள்ளார். ஔவையின் பாடல்களில் இவ்வேகாரங்கள் விளிநிலையிலும் ஈற்றசையிலும் கூட மிகுந்து காணப்படுகின்றன. சங்கப் பாடல்கள் அனைத்துமே ஈற்றசையில் ஏகாரங்கள் அமைத்துப் பாடப் பெற்றவையாயினும் ஔவையின் ஈற்றசை ஏகாரங்கள் தனிச் சிறப்புடையவையாகும்.

**எ.கா.**

"அகவன் மகளே ! அகவன் மகளே!" **(குறு. 23)**

'வாயிலோயே !வாயிலோயே!" **(புறம். 206)**

என ஏகார விளியில் ஔவையாரின் கவிதை ஆற்றல் வெளிப்படுகிறது.

"மறந்தோர் மன்ற மறவார் நாமே" **(குறு. 250 : 4)**

'கானமும் இனிய நும்மொடு வரினே' **(குறு. 388 : 7)**

'மருந்து பிறிதின்மையின் இருந்து வினையிலனே' **(அகம்.147:14)**

என அகப்பாடல்களில் உள்ள ஏகாரத் தொடர்கள் கருத்தாழமும் பொருள் அழுத்தமும் கொண்டுள்ளன.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!" **(புறம்.187 : 3-4)**

'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' **(புறம். 206 : 12)**

எனப் புறப்பாடல்களில் உள்ள ஏகாரத் தொடர்கள் வாழ்வியல் உண்மைகளையும் வெளிப்படுத்துகின்ற தொடர்களாக அமைந்துள்ளன. இத்தகைய ஏகாரங்கள் கவன ஈர்ப்புச் சொற்களாக அமைந்து நடையியல் உத்தியாகவும் செயலாற்றுகின்றன.

### நிறைவுரை

சங்கப் பெண்பாற் புலவர்கள் சங்க இலக்கிய நலனுக்கு ஆற்றிய பங்களிப்பென்பது அளப்பரியதாகும். ஆண்பாற் புலவர்களுக்கு இணையான மொழி ஆற்றலை ஆளுமையை அவர்கள் பெற்றிருந்தனர் என்பதற்கு அவர்களது பாடல்களே சான்றுகளாகும். சங்க இலக்கியத்துக்கென தனிப்பட்ட மொழிநடை இருப்பினும் சொற்கள் பயன்பாட்டிலும் தொடர்கள் பயன்பாட்டிலும் அவர்கள் தமக்குள் தனிப்பட்ட மொழிநடைப் பண்புகளைப் பெற்றிருந்தனர். ஏகாரத் தொடர்கள் சங்க இலக்கியத்துள் மலிந்திருப்பனும் பெண்பாற்புலவர்களது ஏகாரப் பயன்பாடுகள் குறிப்பிட்ட மனவெழுச்சியை, உணர்வினைக் கொண்டு கருத்துகளுக்கு வலு சேர்க்கும் வண்ணம் கையாளப்பட்டுள்ளன. தேற்றம், ஈர்ப்பு, கையறுநிலை போன்ற பல வகையான மனநிலைகளை வெளிப்படுத்துவதாக இவை செயலாற்றும் பாங்கினை இக்கட்டுரை எடுத்தியம்புவதனை அறியலாம்.

### துணைநூற்பட்டியல்


1. அகத்தியலிங்கம், ச. தமிழ்மொழி அமைப்பியல். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2011.
2. அம்மன்கிளி முருகதாஸ். சங்கக் கவிதையாக்கம்: மரபும் மாற்றமும். குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006.
3. சுப்புரெட்டியார், ந. கவிதையனுபவம். கழகவெளியீடு, சென்னை, 1961.
4. ரேணுகா தேவி, வீ. சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2012.
5. வீரப்பன், பா. சங்க இலக்கிய நடை. பூவழகி பதிப்பகம், சென்னை, 2010.



### உரிமம்

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.